# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு
## 2015 / 2016 (ஏப்ரல் - 2019)

**CH: 2112 Jesus and His mission as presented by the Evangelists**

நேரம்: 02 மணித்தியாலங்கள்

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் தலா இரண்டு வினாக்கள் வீதம் மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

### பகுதி I

1. I. லூக்கா நற்செய்தி அமைக்கப்பட்டுள்ள விதத்தினைப் பட்டியலிடுக. (10 புள்ளிகள்)

   II. "அனைவருக்கும் மீட்பு உண்டு" என்பதனூடாக லூக்கா நற்செய்தியாளர் கூறவிளையும் கருத்தினைத் தருக. (10 புள்ளிகள்)

2. I. "யோவான் நற்செய்தியில் காணப்படும் அருளடையாளங்கள் இயேசு மெசியா கடவுளின் மகன் என்பதைக் குறிப்பதாகும்" இதனை வரையறை செய்க. (10 புள்ளிகள்)

   II. யோவான் நற்செய்தியில் காணப்படும் 'எண் ஏழின்' (7) சிறப்பினை உதாரணங்களுடன் தருக. (10 புள்ளிகள்)

3. I. மாற்கு நற்செய்தியாளர் யாருக்காக நற்செய்தியை எழுதினார். (10 புள்ளிகள்)

   II. மாற்கு நற்செய்தியின் "மெசியா மறைபொருள்" எனும் கருப்பொருளைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

### பகுதி II

4. இயேசு நிறுவ வந்த இறையரசு எப்படிப்பட்டது, அதன் தன்மைகள், அதில் இணைவதற்கான தகுதி, இறையரசின் நிறைவு வருகை போன்ற பண்புகளை விளக்கி, இறையரசு தொடங்கப்பட்ட காலத்திற்கும் நிறைவுக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழும் நாம் எவ்வாறு இறையரசின் வாழ்வினை முன்னெடுத்துச் செல்லலாம் என்பதை ஆராய்க. (30 புள்ளிகள்)

5. "இயேசுவின் புதுமைகள் இறையாட்சியின் அடையாளங்கள் ஆகும்" புதுமைகளுக்கும் அருளடையாளங்களுக்கும் ஏங்கித் தவிக்கும் இன்றைய உலகில் எவ்வாறு இவை இறையாட்சியின் அடையாளங்கள் என்பதைப் புரிய வைப்பீர் எனும் கருத்தினை முன்வைக்குக. (30 புள்ளிகள்)

6. லூக்கா நற்செய்தியின் சீடத்துவப் பண்புகள் எவ்வகையில் இன்றைய நவீன உலகின் போக்குகளுக்கு மத்தியில் சீடத்துவ வாழ்விற்கு உதவி புரியும் என்பதனை மதிப்பீடு செய்க. (30 புள்ளிகள்)